சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. Mcop. 298/2013**

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09ம் நாள் திங்கட்கிழமை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **எ.ம.சா.1-**இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.ராதா, எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | தொழில் | முதுநிலைஉதவியாளர், நேஷ்னல் இன்சூரன்ஸ் கம்பெனி, வேலூர் |
| தந்தை பெயர் | கண்ணன் | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

**09.09.2024 முதல் விசாரணை**

1, நான் 2ம் எதிர்மனுதாரர் நேஷ்னல் இன்சூரன்ஸ் கம்பெனி, வேலூரில் முதுநிலை உதவியாளராக பணி புரிந்து வருகிறேன். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானது தான்.

2. விபத்து குறித்து ஆய்வறிக்கை தாக்கல் செய்கிறேன். அது **எ.ம.சா.ஆ1,** ஆக குறியீடு செய்கிறேன். அடையாள அட்டை நகல் **எ.ம.சா.ஆ.2** ஆகும்.

**குறுக்கு விசாரணை**

1. விபத்தில் சம்மந்தப்பட்ட பதிவு எண்.டி.என்.05வி.5238 என்ற டிப்பர் லாரி எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதுஎன்றால் சரிதான். டிப்பர்லாரி ஒட்டுனர் மீதுதான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதுஎன்றால் சரிதான் ஆனால் தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கு முடிக்கப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. இன்னும் அந்த வழக்கு நிலுவையில் தான் உள்ளது.

3. எ.ம.சா.ஆ.1 விபத்து ஆய்வறிக்கை தயார் செய்த ஆய்வாளர் எங்கள் காப்பீட்டு நிறுவனத்தால் நியமனம் செய்யப்பட்ட அலுவலர் என்றால் சரிதான். விபத்தில் காயம்பட்ட சங்கர் என்பவர் எங்கள் காப்பீட்டு நிறுவனத்தை பொறுத்தவரையில் 3ம் நபர் என்றால் சரிதான். இந்த வழக்கில் விபத்தில் காயம்பட்ட சங்கர் என்பவர் இந்த விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் தீராத தன்மையினால் தான் 3 வருடங்கள் தொடர் சிகிச்சையில் இருந்து பின்னர் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல.

4. அவ்வாறு விபத்தில் காயம்பட்ட சங்கர் என்பவர் 3 வருடம் தொடர் சிகிச்சையில் இருந்து வந்தார் என்றும் அவருக்கு இந்த விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் தன்மையினால் தான் இறப்பு நேரிட்டது என்பதுகுறித்து எங்கள் காப்பீட்டு நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட ஆய்வாளர் தனது

ஆய்வறிக்கையில்தெளிவாக குறிப்பிட்டுள்ளார் என்றும்ஆனால்அந்த ஆய்வறிக்கையை இந்த வழக்கில் தாக்கல் செய்யாமல் மறைத்து விட்டோம் என்றால் சரியல்ல. அதனா்ல் எங்கள் காப்பீட்டு நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எ.ம.சா.ஆ1 பொய்யான ஆய்வறிக்கை என்றும் அதை ஏற்று கொள்ள முடியாது என்றால் சரியல்ல.

5. விபத்து சமயத்தில் காயம் பட்ட சங்கா் குடி போதையில் இருந்ததாக நாங்கள் சொல்லிஉள்ளது தவறு என்றால் சரியல்ல. அவ்வாறு சங்கா் குடி போதையில் இருந்தார் என்பது குறித்து சி.எம்.சி மருத்துவமனை வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரியில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

6. இந்த விபத்தானது எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட டிப்பர் லாரியின் ஓட்டுனரின் அஜாக்கிரதையினால் தான் முழுக்க முழுக்க ஏற்பட்டது என்றும் அதனால் சட்டப்படியும் நியாயப்படியும் விபத்தில் இறந்த சங்கருக்கு விபத்து இழப்பீடு வழங்க எங்கள் காப்பீட்டு நிறுவனம்தான் முழுமையாக பொறுப்பேற்க வேண்டுமென்றால் சரியல்ல.